28324

புத்துணர்ச்சி வெளியீடு -க.

# தொழிலாளர் விழிப்பு

20127

★

மதிப்புரை:

பெரியார். ஈ. வெ. ராமசாமி.

அவர்கள்.

★

ஆக்கியோர்:

R. நாகலக்குமி.

★

அறிவியக்க நூற்பதிப்பகம்

506, A. தங்கசாலை தெரு, P. T. சென்னை 3.

உரிமை

ஆக்கியோருக்கே.

விலை

அணா [illegible]

# பொருளடக்கம்

★


எனது நோக்கம்

மதிப்புரை

1. தொழிலாளர் தலைவர்.
2. அறிஞர்கள்.

3,4. தொழிலாளர் முறையீடு.

5. தொழிலாளர் கேள்வி.
6. தாயைக் கொன்று சேயைத் தவிக்க விட்ட முதலாளி.
7. தொழிலாளர் விண்ணப்பம்.
8. முதலாளிகள் பித்தலாட்டம்.
9. முதலாளிகளே திருடர்.
10. தொழிலாளர் கோபம்.
11. பகுத்தறிவுத்தலை.
12. பகுத்தறிவு விளக்கம்.
13. முதலாளி கூற்று.
14. தொழிலாளர் பிற்கால வாழ்வு.
15. முதலாளிகள் ஏக்கம்.
16. தொழிலாளர் ஒற்றுமை.
17. தொழிலாளர் கலங்காமை.

ஏழை மாணவர்கள்

18. தொழிலாளர் வெற்றி வீரம்.
19. காந்தீபாடிகள் எங்கே?

புத்துணர்ச்சி வெளியீடு 1

# தொழிலாளர் விழிப்பு

Dr. J. PARTHASARATHI'S
LIBRARY

திராவிடநாட்டுத் தனிப்பெருந் தலைவர்
பெரியார் ஈ. வே. இராமசாமி
அவர்கள் மதிப்புரை பெற்றது.

ஆக்கியோர்:
ஆர். நாகலக்குமி

அறிவியக்க நூற் பதிப்பகம்
506. A- தங்கசாலைத் தெரு P. T. சென்னை.

உரிமை: ஆசிரியருக்கே' விலை அணா எட்டு

# எனது நோக்கம்

உலகத்தில் பன்னெடு நாட்களாக மக்கள், பசி பட்டினி, பகைகளால் வாழ்க்கையை வெறுத்து பல்வேறு குழப்பங்களால் தூண்டப்பட்டு நிம்மதியின்றி வாழ்ந்து வருகிறார்கள் என்பது கண்கூடு. இதற்குக் காரணம் முதலாளி, தொழிலாளி யென்னும் வேறுபாடுதான் என்பது மறுக்க முடியாத உண்மை.

நிற்க, இவ்வேறுபாட்டைக் களைந்து உலகத்து மக்களெல்லாம் நிம்மதியுடன் வாழவேண்டுமானால், சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் ஒழிந்து எல்லோரும் உழைப்பாளிகளாய் மாறுதல் வேண்டும் என்பது பேரறிஞர்கள் ஆராய்ந்து கண்ட மறுக்க முடியாத உண்மை. ஆதலின் பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வும், சமூகத்தில் ஏற்றத் தாழ்வும், இருக்கும்வரை முதலாளிகளுக்குள் போட்டி மூண்டு. உலகப் பெரும் போரை மூட்டிவித்து, ஏழைத் தொழிலாளர்களின் உயிரைக் குடித்து விடுவார்கள் என்பது திண்ணம். இதைப் போக்க வேண்டுமானால், உலகத் தொழிலாளர்கள் ஒழுங்கான வழியில் ஒன்றுபட்டு நேர் வழியில்நின்றுவர்க்க வேற்றுமையைப் போக்கி எல்லோரும் இன்பமடைய வேண்டுமென்பதே எனது நோக்கம்.

இப்படிப்பட்ட எனது நோக்கமே "தொழிலாளர்கள் விழிப்பென்னும்" நூலாகும்.

இந்நூலை, உலகமக்களின் பொருட்டு ஓயாதுழைத்து வரும் திராவிடத் தந்தை பெரியார், ஈ. வெ. ராமசாமியவர்கள் மதித்துப் படித்துப் பொன்னுரையாம் முன்னுரை கொடுத்து என்னை ஊக்குவித்தமைக்கு என் துளமார்ந்த வணக்கத்தை பெரியாரவர்கட்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். இத்துடன் இந்நூல் வெளிவருவதற்காக தளராத ஊக்கத்தையும், ஆக்கத்தையுங் கொடுத்த பெரியோர்களுக்கும் வணக்கம்.

R. நாகலக்ஷுமி.

திருவையாறு 9-2-1948

# முகவுரை

தோழியர் R. நாகலக்ஷுமி அம்மையாரால் இயற்றப்பட்ட "தொழிலாளர் விழிப்பு" என்னும் இந்நூலைப் பார்த்தேன். இதிலுள்ள பாக்கள் பெரிதும் இக்காலப் பொது உணர்ச்சிக்கேற்ப ஒவ்வொன்றும் படிக்கப் படிக்க படிப்பதற்கும் கேட்பதற்கும்விறுவிறுப்பையும், உணர்ச்சியையும், எழுச்சியையும் கொடுக்கக் கூடியதாகவே இருக்கிறது.

கவிஞர்கள், புலவர்கள், என்பவர்கள், பெரிதும் தங்கள் திறமையைக் காட்டுவதற் கென்றே வக்கணைகளையும், வருணனைகளையும், வார்த்தையடுக்குகளையுமே ஏராளமாய்ப் புகுத்தி கவிச்சுவை, கற்பனைச் சுவை அனுபவிப்பவர்களுக்கு மாத்திரம் மிகுதியாய்ப் பயன்படத்தக வண்ணமே பாக்கள், வசனங்கள் செய்வது வழக்கமாக இருந்து வந்தது; வருகிறது. ஆனல் நெருங்கியகாலமாய் ஒரு

சில பண்டிதர்களும், கவிஞர்களுந்தான் எந்த விஷயம் விளங்க நூல் செய்யப் படுகிறதோ அந்த விஷயத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் படி செய்து விஷயத்தை விளக்கப் பயன் படுவதற்கு அல்லாத சொற்களையும், கருத்துக்களையும் கூடுமானவரை ஒதுக்கி எழுதியும், பேசியும் வருகிறார்கள்.

அப்படிப்பட்ட புலவர்கள் குழாத்தில் சேர்க்கத் தக்க தன்மையில் "தொழிலாளர் விழிப்பு" என்னும் இந்நூல் செய்யப்பட்டிருக்கிறது என்று மகிழ்ச்சியோடு கூறுவேன். இந்நூலில் பெரிதும் ஏழை மக்களான தொழிலாளிகளின் நிலைமை வெகு தெளிவாக்கி அதற்குப் பரிகாரமாக நல்லறிவுரைகளையும் வலியுறுத்தியிருப்பதானது ஏற்றவும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நூலை திராவிட மக்கள் சிறப்பாக தொழிலாளி மக்கள் யாவரும் ஆண்பெண் அடங்கலும் படிக்க வேண்டியது மிகவும் தேவைப்பட்ட செயலாகும்.

ஈரோடு
3-2-1948

ஈ. வே. ராமசாமி.

## 1. தொழிலாளர் தலைவர்

கேளீர்! உழைப்பவரே நல்ல
கிளர்ச்சி செய்வீரே (கே)

நாளெலா முழைத்து வந்தீர்!
நல்லுட லிளைத்து நொந்தீர்! (கே)

குளிர் தடுக்க ஆடையில்லை குடிப்பதற்குங் கஞ்சியில்லை
எளிய குடிசையில்லை யேமாற்றுவோர் தொல்லை (கே)

உழுதுபயிர் செய்பவராா? உரிஞ்சிநன்றாய் வாழ்பவராா?
எழுதிய எழுத்தென்றே சொல்லி யேப்பவராா?
ஒன்றுபட்டால் வாழ்வுவரும் ஒழுங்குவிட்டால் தாழ்வு வரும்
வென்றி நமக்கு வரும் வீணர்க்கு வேதனை வரும் (கே)

மடமையைக் கெடுத்திடுவீர் மாநிலத்தை யாண்டிடுவீர்
கடமை செலுத்திடுவீர் வெற்றி கண்டிடுவீர் (கே)

நல்லது கெட்டதறிய நல்ல கல்வியையறிய
செல்வம் நமக்குவரும் சீருஞ் சிறப்புவரும் (கேளீர்)

## 2. அறிஞர்கள்

1. ஆறுகுளம் வாய்க்கால்கள் அத்தனையும் வெட்டுவித்துச்
சேறுழக்கி யேருழுது செந்நெல்லை-வீறுபெற
வித்தி விளைவித்து வீடுகளி லேகுவித்தோர்
இத்தரையி லேங்குவதும் ஏன்?

2. மாநிலத்தில் மாளிகைகள் மன்னர்க் கரண்மனைகள்
வானளவக் கட்டுவித்து வாழ்வளித்தோர்-
தானிழைத்த

ஓட்டைக் குடிசையிலே யுட்கார்ந் தழுகின்ற
பாட்டாளி மக்கள் துயர் பார்!

3. மூச்சுப் பறிகொடுத்து முத்துக் களையெடுத்தே
ஏய்ச்சமுத லாளிகளுக் கேன் கொடுத்தீர்?
—வாச்சுதென்றே

மக்கள் கழுத்தினிலே மாலையிட்டு வாழ்கையிலே
துக்கிப்ப தேனோ நீ சொல்

4. சாதிமத வேற்றுமையால் சாத்திரத்தா லேவிதியால்
நீதியிலாத் தெய்வத்தால் நீங்களிங்கே—ஆதிமுதல்
வஞ்சிக்கப் பட்டீர்கள் வாழ்வழிந்து கெட்டீர்கள்
கெஞ்சிக்கூத் தாடுவதேன்? கேள்

5. கல்லாத காரணத்தால் கற்பனையை நம்பியதால்
செல்லாத காசுகளாய்ச் செய்து விட்டார்—நல்லீர்!
உழைப்பைப் பறிகொடுத்தீர்! உட்கார்ந் தழாமல்
விழிப்புறுவீர் மேன்மையடை வீர்.

## 3-4, தொழிலாளர் முறையீடு.

ஒருநூறு மாளிகைகள் கட்டிக் கொடுத்தவர்க்
கொருகுடி சைகளான்றேன் றுரிமையுண்டோ

ஒருநூறு வேலிநில முழுதுபயிர் செய்தவர்க்
கொருவேலி நிலமேனு முரிமையுண்டோ

ஒருநூறு கோடிதுணி நெய்தே கொடுத்தவர்க்
கொருதுணியு மேதனக் குரிமையுண்டோ

ஒருநூறு முதலாளி பல கோடி தொழிலாள
ருழைப்புறிஞ் சுதலு மழகோ.?

வாடுகின்ற குழந்தைபசி தீர்ப்பதற்குப் பாலில்லை
வயிறார வுண்ணுதற்கோ வழியுமில்லை.

தேடுமெங்கள் குழந்தைகளைப் போடுதறகுத் தொட்டிலில்லை
தேம்பியழு தாற்கொடுக்கத் தீனியில்லை

ஓடிவிளை யாடுதற்கோ குழந்தைகளுக் குரமில்லை
உற்றபிணிக் குக்கொடுக்க மருந்துமில்லை

தேடிமருத் துவச்சாலை செல்லற் கில்லை
சென்றாலு மருத்துவர்கள் செய்யுந் தொல்லை

## பத்தொன்பதாம் என்ற மெட்டு

1. பஞ்சத்தைப் பட்டினியைப் பஞ்சமா பாதகத்தை
வஞ்சத்தை மக்களுக்கு வயிரத்தையே யுருவாக்குஞ்
சமுக பொருளாதாரப் பெருங்கொடுமைகளைத் தீரும்.

2. பாடுபடுந் தொழிலாளி பட்டினிக்கு முதலாளி
கேடுதருஞ் சூழ்ச்சியெலாங் கேட்கவந்த ஆட்சியினால்
வந்ததிந்த மோசம் மாற்றவே யிந்தக் கோசம்.

## வேறு

அழுகின்ற குழந்தைகட்குக் கஞ்சியின்றித் தாயின்முகம்
அழுது நோக்க
அவளழுதென் முகமதனை யாழ்ந்து நோக்க
எழுகின்ற பசியால்நான் நடைதளர்ந்து பயந்துவந்தே
யெட்டி நோக்க
என்னைநீ கவனியா திருந்து நோக்க
உழுகின்ற என்மனைவி மக்களோ டாறு சென்றே
யுவந்து நோக்க
ஊரிலுளார் கண்டவரை யுற்று நோக்க
விழுகின்ற கண்ணீரால் புரட்சி பொங்கி மேனோக்க
வீரணுக்கி
மேவுபோர் வாள்நோக்க விரும்பினேனே.

## வேறு

பாடுபடுந் தொழிலாள ரெங்களுக்குக் கஞ்சியில்லை
பட்டினியாற் சாகின்றோம் பார்ப்பாரில்லை

வீடுகளெங் களுக்கில்லை மரத்தடியில் வாழ்கின்றோம்
விரித்துடுத்தக் கந்தையிலை மீளாத்தொல்லை

ஏடுகளிற் கணக்கெழுதி யெங்களுழைப் பினையுறிஞ்சி
ஏமாற்றி யுண்டுடுத்தி யிருப்பீர் தாமோ?

ஆடுநனை வதுகண்டே யழுகின்ற ஓநாயின்
அக்கதையை யறியாதா ரகிலத் துண்டோ?

## 5. தொழிலாளர் கேள்வி

1. பாத்திகட்டி யேத்திறைத்து பரம்படித்து நாத்துநட்டுக்
காத்திருந்து நெல்லறுத்துக் களஞ்சியத்தை நிறைத்து
வைத்த
எங்களுக்கேன் பஞ்சம் எதனாலே நாங்கள் தஞ்சம்?

2. மாமரத்தை வைத்தவரார் மாம்பழத்தைத் தின்பவரார்
சாமிதந்த தென்றுரைப்பீர் தந்ததெங்கள் நன்மை
யென்பீர்
செல்லாதுங்கள் வேட்டை தெரிவீரிந்தப்பாட்டை

3. கரும்பாட்டிச் சாறெடுத்துக் கட்டிவெல்லங் கொடுத்
தவரார்?
துரும்பாய் மெலிந்து கையைச் சூப்பியழுதா நைபவரார்
நன்றியில்லைதாமோ நாங்களழுவதாமோ?

4. பருத்திவிதைத்தேயெடுத்து பஞ்சாக்கி நூலிழைத்தே
திருத்தியமைத் தாடைநெய்து சித்திரங்க ளதனிற்
பெய்து
கொடுப்பவன் தொழிலாளி கொண்டுடுப்பவன்
முதலாளி?

5. ஆலைகளைக் கட்டியதார் அதில்வேலை செய்பவரார் ?
நூலுகளை நூற்பவரார் நட்பவேலை செய்பவரார்
கையைப் பொத்திக் குளிரில் கலங்குவோரார்
தெருவில்.

6. ஓட்டைக் குடிசையிலே யொருசாணுப் பாய்தனிலே
பாட்டாளி மனைவிமக்கள் படுத்திருக்கக் காண்கையிலே
கோட்டைகட்டி வாழ்வீர் குவலயத்தை யாழ்வீர.

7. இருபதுக்கு நூலெடுப்பா னேழைநெய்து கூழ்
குடிப்பான்
அறுபதுக்கந் நூலைப்பாவி யவர்கள்வயிற்றில் மண்ணைத்
தூவி
கள்ளமாருக் கட்டா முதலாளிகளுஞ் செட்டா ?.

## 6. தாயைக் கொன்று குழந்தையைத் தவிக்கவிட்ட முதலாளி.

1. காலைநன் னேரத்திலே—பசி
கண்ணைச் சுழற்றையிலே
பாலைக்கா ணுக்குழவி—பசித்தழப்
பார்த்து நோகையிலே

2. வந்துமு தலாளி—வள்ளியை
வாவென்று கூவையிலே
வெந்து துடித்தழுது...வள்ளியும்
வேலைக்குப் போகையிலே.

3. கொஞ்சு மழலைமொழிக்—குழந்தையைக்
கொண்டங்கு செல்லையிலே
அஞ்சுங் குழந்தைகண்டு-முதலாளி
அதை வெறுக்கையிலே.

4. சின்னஞ் சிறுகுழந்தை-பசியால்
தேம்பியழுகையிலே

அன்னமுதலாளி குச்சியால்
அடிக்கும் வேளையிலே.

5. ஓடியொழிய யிலே-வள்ளியை
யுள்ளி யழுகையிலே
தேடி முதலாளி குழந்தையைச்
சீறி யுதைக்கையிலே.

6. துள்ளி விழுந்தழுதே-குழந்தை
துடிக்கும் வேளையிலே
வள்ளி விழுந்தழுது-முத்தமிட்டு
மார்போ டணைக்கையிலே.

7. என்னங்க உங்களுக்குக்-குழந்தை மேல்
இரக்க மேயில்லையா ?
சின்னஞ்சிறு குழந்தை-யொன்றுதான்
செத்திடி லென்ன செய்வேன் ?

8. சீச்சி நாயே போடி-வெளியே
சின்னச்சாதி நாயே
மூச்சுவிட் டாலுதைப்பேன்-எதிர்த்து
முணு முணுக்காதே.

9. ஐயையோ ஐயாவே-வேலை செய்தும்
அரைவயிற்றுக் கஞ்சி
நையநைய அழுது-குடித்திடும்
நான் வசை கேளேனையா !

10. என்றவள் விகூற-முதலாளி
எட்டியுதைக்கையிலே
அன்றுமடிந் தனளே-குழந்தையை
யாரினி யாதரிப்பார் ?

## 7. தொழிலாளர் விண்ணப்பம்

1. கோயில்மடச் சொத்தெனுங் கொடுத்துதவுவீரோ?
குடியிருக்க நல்லநல்ல வீடுகட்டு வீரோ?
நாயிருக்குங் குடிசையிலே நாங்களிருப்போமோ ?
நாடாள வந்தவரே நாடுவீரே!
வாயிருக்கக் கேட்பதற்கு வழியிருக்க வல்லவர்கள்
வழிப்பறியைத் தடுப்பீரோ வாதிப்பீரோ?
தாயிருக்கக் குழந்தை பசிப்பிணியாற் சாக
தாங்குவாளோவுயிரைச் சாற்றுவீரே.

2. நாடாள வந்தவரே நாங்கள் தருவிண்ணப்பம்
ஞாயமெனின் நாட்டுரிமை நல்குவீரோ ?
வீடாளு முதலாளி வேலைசெய்யாச் சதிபாளி
விண்ணுமண்ணுந் தமக்காக்க விரும்புகின்றான்!
வாடியுழைத் தேழுழைப்பை வஞ்சகத்தாற் கொண்டு
மதங்கடவுள் விதி மறைவில் வாட்டுகின்றான்
கோடான கோடிபேர் பசிப்பிணியாற் சாகக்
கொள்ளை கொளல் ஞாயமோ? கூறுவீரே.

3. எத்தனையெத் தனையாண்டாய் எங்களுழைப் பைத்
திருடும்
எத்தர்களைக் கண்டவர்க ளெவருமில்லை
எத்தனையெத் தனையாண்டாய்ப் பசிப்பிணியி
லாழ்த்துகிறார்
இதையறிந்து நாடாண்டா ரெவருமில்லை
எத்தனையெத் தனையாண்டாய்காற்றுமழை யிடிக்கஞ்சி
இருந்து மரத்தடிகளிலே யிருந்து நொந்தோம்
அத்தனையு மாற்றிநல்லபுதுவாழ்வே அளித்திடுவீர்
அவனியுள காலமெல்லாம் ஆள்வீர் நீரே.

## 8. முதலாளிகள் பித்தலாட்டம்

1. ஐந்துபெரும் பாதகங்கள் அவர்கள் செயுங்காதகங்கள்
கந்தன் சிவன் பெருமாள் கட்டிவைத்த கடவுளர்கள்
பேரு சொன்னால் தீரும் எனும் பித்தலாட்டம் பாரும்!

2. நாள் முழுதும் ஏய்த்திடுவார் நாடுவார் கோயில்களை
வாள் விழியார் மையலிலே மனஞ்செலுத்தி நின்றிடுவார்
கோளுரைத்து வாழ்வார் கொலைபுரிந்தும் ஆள்வார்

3. மனைவி மக்கள் மாயையென்பார் மற்றெவையு மழியுமென்பார்
தினையளவும் மனமிரங்கார் சீமையெலா மென்னதென்பார்
இனையவர் வேதாந்தம் நமக்கியம்புவார்கள் சாந்தம்.

4. ஏழைபங்காளனைத் தொழுவார் ஏழைகளையேய்த்திடுவார்
ஊழைநமக் கெடுத்துரைப்பார் ஊர்முழுதும் எமதென்பார்
வாழச் செய்யுஞ் சூழ்ச்சி செய்தாலுவா ரரசாட்சி.

5. மூர்த்திதலந் தீர்த்தமென்பார் முழுகினால் மோக்ஷமென்பார்
கார்த்திகை விரதமென்பார் கண்ணீர்விட்டு மழுவார்
வார்த்தை நம்பி நம்பி மதிமோசம் போனோந் தம்பி.

6. கோயில்கள் கட்டுவிப்பார் குடங்குடமாய்ப் பால் சொரிவார்
ஆயிரமாயிரம் விளக்கை யாலயத்தில் ஏற்றிவைப்பார்
தாயிலாக் குழந்தை தமக்குமே யிரங்கார்.

7. நாய்நரிகளைத்தொடுவார் நந்தனையுஞ் சேவிப்பார்
வாயிலடித் தேயழுவார் மாதவனைக் கூப்பிடுவார்
வாயிலாத மக்கள் தம் வாடையுந் தீட்டென்பார்

8. பேய்களு முண்டென்பார் பில்லி சூனிய மென்பார்
ஆயுமவர் சோதிடத்தை யாராய்ந்து பாருமென்பார்
காயுங் கடவு ளென்பார் கந்தகள் கட்டி யுண்பார்.

## 9. முதலாளிகளே திருடர்.

நாதர் முடி மேலிருக்கும் மேட்டு.

1. பட்டப் பகலிற்கண்ணில் மண்ணைத் தூவியே
பறிமுதல்செய் கின்றார்தொழி லாளராவியே
கட்டத்துணி யில்லையேநன் காளவந்தாரே
கள்ளமார்க்கட் டுக்கொள்ளைக்குக் காவல்தந்தீரே.

2. பசியினாற் காணமலொரு வர் தம் பொருளைப்
பறிப்பவர்க்குத் திருடரென்று பட்டந் தந்தீரே
வசியமெனும் வஞ்சகமய்யால்மயக்கியே யெங்கள்
வாழ்வுதிரு டும்பணக்கா ரருங் கள்ளரே

3. பாழும் பசிக்கொடுமை யாற்பதுங்கியே
பண்டங்களைத் திருடித் தின்பவரையே
கூழ்குடிக்க மொட்டை தட்டிச் சிறை கொடுப்பீர்!
கொள்ளைலாபக் காரருக்குப் பட்டங் கொடுப்பீர்!

4. வாளெடுத்துச் சண்டைசெய் தயிருங் கொடுப்பார்!
வயிறுவளர்க் கத்திருடி வாடு வோரை
தாளிட்டுச் சிறைகொடுத்துத் தண்டிப் போரே
தானுழைக்காத் திருடர்களைத் தண்டிப்பீரோ?

5. கொள்ளை கொலைகளவை வளர்ப்பவர் யார்?
கோடி கோடி யாய்த்திருடிச் சுமப்பவர் யார்?
கள்ளமாருக் கட்டினிலே கொள்ளை செய்வோரை
கண்டுபிடித் தேசிறைக்குக்கொண்டு போவீரோ?

6. பட்டப் பகலிற் கொள்ளை யடிப்பவர்க்கே
பரியாயப் பெயர்முத லாளிகளிவர்க்கே
இட்டஇட்ட அகராதி களிலிப்பேரை
எடுத்தெறிந்தச்சு வாகனம் ஏற்றினரோ !

## 10. தொழிலாளர் கோபம்

1. பகுத்தறிவு வாளெடடா
பாழ்ம்பழமை வெட்டிடடா
தொகுத்த செல்வ மிருக்குதடா
சொல்லி முறையாய்க் கேட்டிடடா
உருவ மாறிமாறி நமை யுரிஞ்ச வருவார் பாரீர்

2. சாதிமதக் கட்டறுத்துச்
சாத்திரங்கள் சுட்டெரித்து
வீதியெலாம் பள்ளி வைத்து
விஞ்ஞானக் கலை வளர்த்து
மக்கள் மடம் போக்கு மாநிலம் பொதுவாக்கு

3. பொய்சூது கொலைகள வேன் ?
பொருள்யார்க்கும் பொதுவெனிலே
வையகத்திற் சண்டைக ளேன் ?
மக்களுக்குள் பகைமைகளேன் ?
நீதிநூல்கள் தாமோஇவை நீக்கிடவும் போமோ.

4. பணக்கார னேழையென்ற
பட்டமுள நாள்வரைக்கும்
பிணக்குலகிற் றீராதென்றே
பேசுகின்று றறிஞரெல்லாம்
போக்கிடுவீரே யிதற்கோர் புரட்சி செய்வீரே.

# 11. பகுத்தறிவுத்தளை

வள்ளிக்கணவனையே.

1. மன்னர்களுஞ் செல்வர்களு மடப்பர தேசிகளும்
என்னருமைத் தோழர்களே!-நம்முழைப்பை
ஏமாற்றி வாழ்வதற்கே.

2. பகுத்தறி வைமறைக்க பாழடிமை யாக்குவிக்க
தொகுத்தபு ராணங்களை-நம்பவைத்தாரே !
தொழிலாளர்க் காவதென்ன ?

3. செத்தபி றகுமுத்தி சேருதற்கா கவேமூட
பத்தி செலுத்தச் செய்யும்-புராண நூல்கள்
பழமையில் மூழ்கச் செய்யும்.

4. சூரியனு லகினையே சுற்றவொற்றை யாழியந்தேர்
ஏறிவந்து போருமென்றே-புழுகுகின்ற
எட்டைநீ படிக்காதே

5. இயற்கையை யுள்ளபடி யெடுத்துச் சொல்வதைப்படி
முயற்சியை வீணாக்காதே-புழுகிவைத்த
மூட்டைகளைப் படிக்காதே.

## 12. பகுத்தறிவு விளக்கம்

1. தேனினு மினியசெந் தமிழில் திருக்குறளை
ஆனதொல் காப்பியத்தை-சங்க நூல்களை
அலசியலசிப்படி.

2. நாட்டுவர லாற்றைப்படி நல்லபூகோ ளத்தைப்படி
காட்டுங் கணக்கைப்படி--விஞ்ஞானத்தை
கட்டாயம் நன்றாய்ப்படி.

3. வானநூல் நிலநூல்களை மருத்துவ நூல்களையே
ஆனவரை யிலும் படி--விடாமற் படி
அறிவியல் நூல்களை யே

4. கடலிலே கப்பலோட்டகாருகளைச் செய்து ஓட்ட
நடை முறையில் தொழிற்கல்வி-உள்ள தெலாம்
நன்றாக விடாமற்படி.

5. காரல் மார்க்க சியம்படிகருதுமே ஞ்சலைப்படி
வீரன் லெனினைப்படி--ஸ்டாலினையும்
விட்டு விடாமற்படி.

## 13. முதலாளிகள் தொழிலாளருக்குச் சொல்லுதல்

போதுமென்ற மனமில்லை புரிகின்றீர் பெருந்தொல்லை
எது செய்வீர் கடவுளிட்ட எழுத்தளிக்கப் படுமோ
சொல்?
வாதுமிகப் புரியாதீர் வயிற்றிலடிப் போங் கெடுவீர்!
சாதுவாய்த் தானிருங்கள் தடுத்துரைப்பின் தண்டனையே!

படைத்தவ வுளும்விதியாற் பரிதவித்தே யிரந்துண்டான்,
எடுத்துச்செங்கோ லோச்சியவர் இரந்துண்டார், தலைவிதி
யால்

அடுத்தாரைக்கெடுத்தவர்கள் ஆண்டானையெர்த்தவர்கள்.
கொடுத்ததுகொண் டுழையாருங் கொடுநரகிற் சேர்வாரே,
அழிந்திடுமிவ் வுலகாசை யருந்துயரைக் கொடுப்பதுடன்
இழி கழுதை நாய்பன்றி யெனும்பிறப்பை யுண்டாக்கும்
கழிந்தபிற கெமதூதர் கயிறுளுன் னுயிர்பிடித்தே
குழிந்தாழ்ந்த உன்றுகண்ணிற் குத்திநர கிடுவாரே!
ஆண்டானை யெதிர்த்த தொழிலாளர்களை யம்தூதர்
நீண்டுகொழுந் தெரிநெருப்பில் நிலைத்தளண்ணைக்
கொப்பரையில்
ஆண்டாண்டாய்க் கிடத்திடுவார் அருநரகிலடைத்திடுவார்
வேண்டா மடாவேலை விலக்குகளைச் செய்யாதே!

## 14. தொழிலாளர் பிற்கால வாழ்வு

1. உடலிலே நல்லிரத்த முள்ளமட்டி லுழைத்து
கடனாளி யானேமடா—பிற்காலத்தைக்
கழிப்பது மெப்படியோடா?

2. நாள்முழுதும் வேலைசெய்தோம் நல்லகஞ்சி
யுண்டறியோம்
தோள்கள்மு றிந்தோமடா—பிற்காலத்தைத்
தொலைப்பது மெப்படியோடா?

3. உழைத்தவு ழைப்புரிஞ்சி யுண்டமுத லாளிகள்தாம்
பிழைத்துக்கொ ழுத்துநம்மை—பிற்காலத்திற்
பிச்சைக்கார ரென்பாரடா!

Dr. 17 PARTHASARATHI'S
LIBRARY

4. பாடுபட் டவுழைப்பைப் பறித்தமு தலாளிகள்
ஓடெடுத்துச் சென்றாலுமே—பிற்காலத்தி
லோட்டையு டைப்பாரடா!

5. அட்டைபோல வேயுறிஞ்சி விட்ட முதலாளிகளும்
எட்டியு தைப்பாரடா—பிற்காலத்தி
ஏளனஞ் செய்வாரடா!

6. மாடுகளைப் போலுழைத்து மாடிகளைக் கட்டி வைத்தும்
வீடுநமக் கில்லையடா—பிற்காலத்தில்
விடுதியிலுஞ் சேர்க்காரடா!

## 15. முதலாளிகள் ஏக்கம்

1. சாதிம தங்கடவுள் போச்சே—பகுத்
தறிவு தலையெடுக்க லாச்சே!
வேதியர் வேதங்களுக் கேச்சே—வேசி
மக்களென்று சொல்லப்பய மாச்சே!

2. கோயிற்கு ளங்கள்கெட்டுப் போச்சே—பறையரைக்
கூட்டிவந் துள்ளேவிடவு மாச்சே
வாயில்மி திக்கவஞ்சி வாழ்ந்தோர்—தெளிந்து
வந்துநம்மை மிதிக்கின்றார் தாழ்ந்தோர்!

3. மோட்சந ரகக்குட்டுப் போச்சே—நம்மையே
மொட்டையடிக் கப்பேசுறார் பேச்சே!
போச்சுப ழமையெலாம் போச்சே—இனிப்
புதுவழி நாமும்போக லாச்சே!

4. பாவபுண் ணியமென்ன ஆச்சு—பணக்
காரரேழை யில்லாமற் போச்சு!
காவலர்க ளுமஞ்சிட லாச்சே—மக்கள்
காசினியை யாண்டிடவும் பேச்சே!

5. கண்டவடன் கையெடுப்பார் போச்சே—கலி
காலத்தினால் நமக்கிழி வாச்சே
சிண்டுவைக்க வும்பயமுண் டாச்சே—அதைச்
சிரைத்தாலே நம்பழமை போச்சே!

6. வெள்ளையரா ட்சிவெளியே போச்சே—நாமும்
வேறுதுணை தேடிடவு மாவச்சே!
கள்ளையுஞ்சா ராயத்தையு மாய்ச்சே—இழிந்தோர்
கண்விழித்துத் தெரிந்திட லாச்சே!

## 21. தொழிலாளர் ஒற்றுமை

1. உழைப்பவர்க ளொருகுலமென் றுணருமுணர்
வுங்களுக்குள்.
தழைப்பதற்குக்கழகங்கள்; தலைவருரை சிரமேற்கொண்
டிழைப்பதற்குத் தளராத இரும்புநெஞ்சும் பெறுவீரேல்
அழிப்பவர்கள் பயந்தஞ்சி யணைக்கவரு வாரவரே.

2. உழைப்பவர்க ளொருகுலமென் றுணருமுணர் வது
வேண்டும்;
உழைப்பவர்கள்க ழகங்கள் ஒளிதிகழப்பெறல்வேண்டும்;
உழைப்பவருக் கறிவூட்டி யொழுக்கமுடன்
நடத்துதற்கே
உழைப்பவர்கள் தலைவர்களென் றுறுதுணையாம் வரல்
வேண்டும்.

3. தன்னலமே கருதாத தலைவர்களின் குறிப்பறிந்து
எந்நலமுங் கருதாம விளைக்காமற் சளைக்காமல்
இன்னல்களை நினையாம லின்பமதை நாடாமற்
சொன்னபடி நடப்பீரேல் துணையாவா ரவர்நமக்கே.

4. அஞ்சியஞ்சி யழுகாதே அரைவயிற்றுக் குழைக்காதே
தஞ்சமில்லை யடையாதே தருமுலகும் நமக்கேயாம்
பஞ்சமில்லை புதுவுலகம் படைத்திடுவோம்
பசிகெடுப்போம்
நஞ்சனைய முதலாளி யுலகமுமே நசித்திடுமே!

5. துப்பாக்கி யெடுத்துநமைச் சுடவருவார் துணிந்து
நிற்பீர்!
தப்பாக்கிக் குறைசொலுவார் தடிகொண்டுந்
தாக்கிடுவார்;
எப்படியுந் தமதாட்சி யிருப்பதற்கே முதலாளி
செப்படிவித் தைகள்செய்வான் சிறிதும் நீ மயங்காதே!

## 17. கலங்காமை

1. அடக்கிநமை யுறிஞ்சுதற்கே ஆயுதங்கள் பலப்பலவாம்;
அடக்கிநமை யொடுக்குதற்கே யருஞ்சிறைகள்
பலப்பலவாம்;
அடக்கிநமை யழிப்பதற்கே யடங்காத மறக்கொடியோர்
அடக்கிநமை யரசுசெய அணுகுண்டு மேயதற்கே!

2. பொதுவுடைமையெனும் பெரிய புதுவாழ்வு புரிவதற்கே
நிதியுடைமை யுழைப்பவர்க்காய் நிலமுதும்முழுபவர்க்
சதிபுரியு நெஞ்சனைய தனியுடைமைத் தளையகற்ற [காய்
எதுவரினுங் கலங்காம லிருந்துநா முழைப்போமே.

3. தொலைத்தென்றுந் துயரமெலாந் துடைப்பதற்கும் நமதாட்சி
நிலைத்தென்றும் நிற்பதற்கும் நிதிசிலருக் காக்குகின்ற
கொலையாட்சி முதலாளி கொடுங்கோன்மை தனையகற்ற
உலைபாம லுடலுயிரை யுலகினுக்கே யுதவுவீரோ?

4. ஆண்டாண்டா யிருந்துவரு மடிமையெனுந் தளையகற்றி
ஆண்டாண்டா யிருந்துவரு மல்லலைநாம் சுட்டெரித்தே
ஆண்டாண்டாய் மறைந்திருக்கு மன்புவிளக் கேற்றிடுவோம்;
ஆண்டாண்டா யாண்டிடுவோம் அறிவின்மேம் லணையிதே.

5. நாமுலகில் நல்லாட்சி நடுவதற்குத் துயர்கொடுப்பார்
பாமரர்தந் துணைகொண்டே பலவகையி லடக்கிடுவார்
தீமைகளை விலக்குதற்குச் சிறிதளவு மனமொவ்வார்
ஆமுலகி லிவராட்சி யழியுமினி யறிவீரே.

## 18 ஏழை மாணவர்கள்

1. காலையிலே பழையகஞ்சி வயிறுற வில்லை
கல்வியிலே யெங்கள்மனஞ் செல்லவுமே யில்லை
சாலையிலே நடந்திடக்கண் ணுத்தெரிய வில்லை
சாறுமில்லை சோறுமில்லை யென்கிறீர் தொல்லை
மாலையிலே வீடுவந்து பார்க்கமனம் வல்லை
வாத்தியா யயர்க்குமே நல்லமன மில்லை.

2. பூகோளம் பாதிக்கு மேல்நடந்து போச்சே!
புத்தகம்வா ங்கக்காசே யில்லையெனும் பேச்சே!
ஆகின்ற சரித்திரமு மரைவாசி யாச்சே!
ஆங்கிலமு நடந்தாச்சே! யம்மாவென் பேச்சே!

ஓகோகோ ஆசிரியர் வைகின்ற பேச்சே!
ஒறுத்திறுக்க முடியவில்லை யொழிந்திடவு
மாச்சே!

கூகூவென் றேயழுத கண்ணீரால் நனேச்சே
கொடுத்திடுவேன் வெள்ளைத்தாள் பரிச்சையிலே
யேச்சே!

## 18. தொழிலாளர் வெற்றி வீரம்

1. உழைப்பவரை நாமுயர்த்தி வாழ்த்துவோமே;
உண்டுசும்மா இருப்போரைத் தாழ்த்துவோமே

வழிப்பறி செய்துழைப்பை வஞ்சிப்போரை
மாய்த்தவரை யேயழிப்போஞ் சிந்திப்பீரே!

2. நாட்டைநமக்குரிமை யாக்குவோமே;
நாமுலகில் நல்லாட்சி நாட்டுவோமே;

பாட்டைப்ப றிகொடுத்து வாழமாட்டோம்
பறக்கவிட் டவரையினிச் சேர்க்கமாட்டோம்!

3. எங்களுழைப் பேசெல்வ மென்பதறிந்தோம்;
ஏமாற்றி நீங்கள்பிழைத் ததுந்தெரிந்தோம்;

உங்களுக்குக் கைலாசம் வைகுண்டம்மே
உண்மையை மறைத்திருந்தீ ரேகண்டமே!

4. மூட்டைமு டிச்சுகளைக் கட்டிவெளியே
மோட்சலோகத் திற்கேகீர் செல்லுமினியே!

கோட்டையிலொளிந்தாலும் விட்டிடுவோமோ
கோரயுத்த மேபுரிந்து காட்டிடுவோமே!

5. பகுத்தறிவைப் பாழ்படுத்தி யேமாற்றினீர்!
பாழடிமை யாக்கியெங்க ளைத்தூற்றினீர்!

வகுத்தான்வ குத்தவகை வாழுவீரென்றே
வார்த்தையுரைத் தேமாற்றி வந்ததுநன்றோ!

## 19. காந்தியடிகள் எங்கே?

1. உலகமெலாம் புகழ்கின்ற உவமையிலா ஒருபெரியோன்
இலகுபல வுயிர்களுக்கா யிரங்குகின்ற அருளுடையோன்
மலைகலங்கி னுங்கலங்கா வாய்மைநெறி தவறாதோன்
திலகமென வுலகினிலே திகழ்காந்திப் பெரியாரே.

2. மண்ணுலகம் வெடித்தழுக மரங்களெலங் குதித்தழுக
எண்ணுகின்ற மலைகளெலா மிருந்துநொந்து விழுந்தழுக
விண்ணிலுள ஞாயிறொடு வெண்மதியும் விழுந்தழுக
புண்ணியனை மதப்பாம்பு புகுந்துகடித் ததும்விதியோ?

3. மோதிலா லெனுங்கடலில் முளைத்தெழுந்த முத்தழுக
நீதறியாப் பெரியாராந் திராவிடத்தந் தையுமழுக
ஓதுகின்ற பட்டேலு மொளிமழுங்கி விழுந்தழுக
சாதிமத வெறிப்பாம்பு தனியமிழ்தைக் குடித்தந்தோ!

4. திரு. வி. கா வருந்தியழத் தேவதாஸ் நினைத்தழுக
ஒருநாளு மறவாத ஓமாந்தூ ரண்ணலழ
அருவியெனக் கவிபொழியு மம்மைசரோ சினியழுக
பெருமைதர நமக்குவந்த பெம்மானர் பிரிந்தாரே!

5. வாய்மையெனு மமுதூட்டி வறுமையெனும் பகை
யோட்டித்
தூய்மையெனு முளங்காட்டித் துகளில்லாப் புகழ்நாட்டித்
தாய்மைதனை மிகக்காட்டித் தனிக்கருணை தனைப்பூட்டி
ஆயும்விடு தலைகாட்டு மருளொளியு மறைந்ததுவே

6. அண்ணலா ரெனுங்காந்தி யடிகளுயிர் குடித்துவிட்டு
எண்ணாமற் சழக்கரெலா மிருமாப்பா யினியபாண்டம்
கண்ணார வழங்குவரேல் கவலையிலாக் கல் லுளமோ!
எண்ணாத இரும்புளமோ இவர்மக்கட் பதரலவோ ?

7. முதலாளி முடியாட்சி முறியடித்துப் பறைசாற்றி
புது வாழ்வு தொழிலாளி புரிவதற்கே வழிகாட்டும்
பொதுவாழ்வைக் காந்தியெனும் புத்தமிழ்தைக் குடித்தடங்காச்
சதிபுரியும் மதப்பாம்பைத் தலையிலடித் தெரிப்பீரோ ?

8. அறிவொன்றே கடவுளென்ற அன்புநிறை புத்தரென்கோ
நெறிநின்றே யறமுரைத்த நேயநிறை யேசுவென்கோ
வெறியர்களை யடக்குவித்த மிகுபுகழ்சேர் நபியென்கோ
குறையாத இரக்கமெனுங் குணமலையெம்மண்ணலையே

9. வஞ்சனையா லுலகமெலாம் மழுங்கவைத்து மதிகெடுத்த
நஞ்சனைய வெள்ளையரை நடுங்கவைத்து வெளியோட்டி
நெஞ்சினைநல் வழிப்படுத்தி நிலைத்தவுண்மை வெளிப்படுத்திக்
கொஞ்சுகின்ற விடுதலையைக் கொடுத்தவர்நம் காந்தியன்றோ !

10. துறவிகளெண் ணாயிரம்பேர் துயருறவே கதைகட்டி
இறந்தழியக் கழுவேற்றி யிருமாந்திவ் வுலகத்தில்
சிறந்தநல்ல அறிஞர்தமைச் சிறைபடுத்தி நஞ்சூட்டி
அறங்கெடுத்த தெதுவதுவே அண்ணலுயிர் அருந்தியதே.

★

## அன்புக்காணிக்கை.

விருப்பு வெறுப்பின்றி மக்கள் முன்னேற்றங் கருதி அவர்களிடத்தில் ஊறிக்கிடக்கும் மடமை, எளிமை, ஏழ்மை, சிந்தனையின்மை, ஆராய்வின்மை முதலியவைகளைப் பகுத்தறிவு வாள் கொண்டு வீசி, உலகை அன்பாற் பிணித்தற்கு அல்லும் பகலும் ஒய்ச்சல் ஒழிவின்றி இடையருது உழைத்துவரும் சிந்தனைச் சிற்பி, பெரியார் ஈ. வெ. ராமசாமியவர்களுக்கு என் அன்புக் காணிக்கை.

## வெண்பா

திராவிடத்தைக் காக்க வெண்ணித் தீமையெலாம் போக்க
அராவிடத்தார் சூழ்ச்சி யறிந்தே—இராதுழைக்கும்
ஈரோட்டு வள்ளலார் ஈ. வெ ரா நம்பெரியார்
சீருக்கே யிந்நூல்செய் தேன்.

ஆக்கியோர்.

# இனி வெளிவரும் நூல்கள்

1. பொது வாழ்வு.
2. விதியா? சதியா?
3. செய்ய வேண்டியதென்ன?
4. இனிமேலாவது.

●

தொழிலாளர் விழிப்பு. 'கிடைக்குமி ங்கள்"

1. ரகுமான், நியூஸ் ஏஜண்ட்
மணிக்கூண்டு—தஞ்சை.

2. R. நாகலக்ஷுமி.
61, தெற்குவீதி. திருவையாறு.

ஸ்ரீ ரங்கா பிரஸ், சென்னை 5. க்யு. எச். ஏ. எஸ். ரெ. 651. காப்பி 8